# 2

# தேசிய வெளியீடும் செலவினமும்

உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய முன்னொருபோதுமில்லாத சவால்களுக்கு மத்தியில், இலங்கையின் பொருளாதாரம் 2019இன் 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஏறத்தாழ 1.7 சதவீதம் கொண்ட எதிர்க்கணியமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்யும் என எறிவுசெய்யப்பட்டிருக்கிறது. துரிதமாக கிடைக்கக்கூடிய பொருளாதார குறிகாட்டிகளின் அண்மைய அபிவிருத்திகளுடன் இசைந்துசெல்கின்ற விதத்தில் முதலரைப்பகுதியின் கணிசமான சுருக்கத்தினைத் தொடர்ந்து ஆண்டின் பின்னரைப்பகுதியில் பொருளாதாரம் வளர்ச்சிக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிடைக்கத்தக்க அலுவல்சார் புள்ளிவிபரங்களின்படி, பொருளாதாரம், 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதற்காலாண்டில் 1.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்திருக்கிறது. ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் ஏற்பட்ட சுருக்கத்திற்கு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவுகளே பெருமளவிற்கு தூண்டுதல்களாக அமைந்தன. வேளாண்மை நடவடிக்கைகளிலும் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தமைக்கு தேயிலை மற்றும் தெங்கு பயிர்ச்செய்கையிலும் மீன்பிடியிலும் காணப்பட்ட குறைந்த செயலாற்றமானது அரிசி, தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழவர்க்க பயிர்ச்செய்கைகளின் நேர்க்கணிய பங்களிப்புக்களை மறுதலித்தமை முக்கிய காரணமாக அமைந்தது. இருப்பினும், ஒட்டுமொத்த எதிர்க்கணியத் தன்மையினை தணிக்கின்ற விதத்தில் பணிகள் நடவடிக்கைகள் நேர்க்கணியமாக பங்களித்தமைக்கு நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் ஏனைய தனியாள் பணிகளில் கணிசமான வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மோசமான தாக்கம் காரணமாக ஆண்டின் இரண்டாம் காற்பகுதியில் அனைத்து மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டமையானது வளர்ச்சியைத் தூண்டும் இறை மற்றும் நாணயக் கொள்கை நிலை, பொதுத் தேர்தலைத் தொடர்ந்தான கொள்கையின் நிச்சயத்தன்மையில் ஏற்பட்ட மேம்பாடு என்பனவற்றுடன் சேர்த்து ஆண்டின் பின்னரைப்பகுதியில் பொருளாதாரத்தில் மீட்சி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த வட்டி வீதச் சூழல் மற்றும் உறுதியான அரசியல் சூழலொன்றில் மேம்பட்டிருக்கும் வியாபார நம்பிக்கை என்பன பொருளாதாரத்தில் நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்வியைத் தூண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் கூட, முக்கிய வர்த்தக பங்காளர் பொருளாதாரங்கள் மீட்சியடையக்கூடிய காலவரையறையின் நிச்சயமற்றதன்மை, அதேபோன்று 2020 ஒத்தோபரில் நாட்டில் அவதானிக்கப்பட்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் அடுத்துவரும் அலைகளின் சாத்தியமான தாக்கம் என்பனவற்றின் காரணமாக வெளிநாடு மற்றும் உள்நாடு இரண்டிலிருந்தும் தோன்றக்கூடிய கணிசமான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் வளர்ச்சிக்கு காணப்படவே செய்கின்றன.

2


## 2020இன் அபிவிருத்திகள்

### வெளியீடு

- **2019இன் தொடர்பான காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் பொருளாதாரம் 1.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** பணிகள் நடவடிக்கைகள் வளர்ச்சியைப் பதிவுசெய்து இருப்பினும், கைத்தொழிலும் வேளாண்மையிலும் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிகள் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் எதிர்க்கணியமான வளர்ச்சியைத் தோற்றுவித்தன. 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகள் 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 2020இன் முதற்காலாண்டில் கைத்தொழில் நடவடிக்கைகள் சரிவடைவதற்கு முக்கிய பங்களிப்பாளராக காணப்பட்டதோடு அதனைத் தொடர்ந்து புடவை மற்றும் ஆடைகள் தயாரிப்பில் காணப்பட்ட முக்கிய பின்னடைவுகளின் காரணமாக சுருக்கமடைந்த தயாரிப்பு நடவடிக்கைகளும் வீழ்ச்சிக்குப் பங்களித்தது. மேலும், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் காணப்பட்ட சுருக்கமும் கைத்தொழில் நடவடிக்கையின் வீழ்ச்சிக்குப் பங்களித்தது. அதேநேரம், 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் 5.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வீழ்ச்சிக்கு காலண்டுப்பகுதியில் தேயிலை, எண்ணெய்ப் பசை கொண்ட பழவர்க்க (தெங்கு, செவ்விளநீர், மற்றும் எண்ணெய்த் தாவரம்) பயிர்ச்செய்கைகள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட குறைந்த செயலாற்றமே பெருமளவிற்கு காரணமாக அமைந்தது. எனினும், 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் பணி நடவடிக்கைகள் 2019இன் முதற்காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்யக்கூடியனவாக இருந்தது. இவ்வளர்ச்சிக்கு நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் மற்றும் ஏனைய தனியாள் பணிகள் மற்றும் உண்மைச் சொத்துக்கள் (வதிவிட சொத்துரிமை உட்பட) என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய ஆதரவாக அமைந்தது. அதேவேளையில், 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் உற்பத்திகள் மீதான மானியங்களைக் கழித்த வரிகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 2.1

காலாண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் (அ)





(அ) தரவுகள் 2010 அடியாண்டிற்கான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- **மத்திய வங்கியின் நடுத்தரகாலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின்படி, 2020இன் பொருளாதார வளர்ச்சி 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 1.7 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான இடையூறுகளின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு மத்தியிலும் 2020இன் பின்னரைப்பகுதியில் பொருளாதாரம் மீட்சியடையுமென ஊகிக்கப்படுகிறது. வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு மற்றும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகள் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மூன்றாம் காலாண்டுப்பகுதியிலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலைத் தொடர்ச்சியின் மோசமான தாக்கம் ஏற்படுவதற்கான சாத்தியத்தினை இச்சந்தர்ப்பத்தில் நிராகரிப்பதற்கில்லை. பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக வழக்கத்திற்கு திரும்புவதுடன் தயாரிப்பு நடவடிக்கைகளில் கணிசமான மீட்சி எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் உறுதிப்பாடும் நீண்டகால காசுப்பாய்ச்சல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகை வழிமுறைகளும் ஆண்டுப் பின்னரைப்பகுதியில் கட்டடவாக்கத் துறையின் நடவடிக்கைகளைத் தூண்டும். பணிகள் நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான நாடுகளுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடுகள், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிவகைப் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து போன்ற சுற்றுலாவுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சிக்குத் தடைகளை ஏற்படுத்துகின்றன. எனினும், சுற்றுலாவிடுதிகளினால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான விடுமுறைக்காலப் பொதிகளினால் உள்நாட்டு சுற்றுலா வேகமடையத் தொடங்கியிருப்பதுடன் நிதியியல் பணி நடவடிக்கைகள் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில்

வரைபடம் 2.2

## தேசிய வெளியீடு மற்றும் செலவின நிழற்படம் - முதலாம் காலாண்டு 2020




| | |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | -1.6% ↓ |
| பணிகள் | 3.1% ↑ |
| கைத்தொழில் | -7.8% ↓ |
| வேளாண்மை | -6.6% ↓ |
| மானியங்களைக் கழித்த வரிகள் | -10.8% ↓ |

### 2020 முதலாம் காலாண்டுப்பகுதியில் முதன்மைப் பொருளாதார நடவடிக்கைகளின் செயலாற்றம்

**பணிகள் நடவடிக்கைகள்**

நிலையான விலைகளில் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

| | |
|---|---|
| மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் | 4.1% |
| தனியாள் பணிகள் | 3.4% |
| போக்குவரத்து | -0.1% |
| நிதியியல் பணிகள் | 9.0% |

**கைத்தொழில் நடவடிக்கைகள்**


நிலையான விலைகளில் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

| | |
|---|---|
| தயாரிப்பு | -4.1% |
| கட்டடவாக்கம் | -16.0% |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | -18.3% |
| மின்வலு | 2.3% |

**வேளாண்மை நடவடிக்கைகள்**

நிலையான விலைகளில் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

| | |
|---|---|
| மொத்த மீன்பிடி | -8.9% |
| வாசனைத்திரவியங்களின் வளர்ப்பு | 1.5% |
| பழவர்க்கங்களின் வளர்ப்பு | 7.4% |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவர்க்கங்களின் வளர்ப்பு | -12.8% |




| | |
|---|---|
| தனியார் நுகர்வு | 7.7% ↑ |
| அரசாங்க நுகர்வு | 11.4% ↑ |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | -4.1% ↓ |
| தேறிய ஏற்றுமதிகள் | -151.0% ↓ |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | -16.1% ↓ |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதி | -4.2% ↓ |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

முக்கியமாக எதிர்பார்க்கப்படும் விரிவாக்கம் 2020இன் பின்னரைப்பகுதியில் ஒட்டுமொத்த நடவடிக்கைகளின் சாதகமான வளர்ச்சிக்கு பங்களிக்கும். வேளாண்மை நடவடிக்கையினைப் பொறுத்தவரையில் அரிசி, தானியங்கள், பழவர்க்கங்கள் மற்றும் காய்கறிகளின் பயிர்ச்செய்கை கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்யும் என்பதுடன் இது தேயிலை, இறப்பர், எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்கள் மற்றும் மீன்பிடி என்பனவற்றின் குறைந்த செலாற்றத்திற்கு மாறாக ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளில் கணிசமான சாதகமான வளர்ச்சியை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மானியங்களைக் கழித்த வரிகளின் கூறில் ஏற்பட்ட சுருக்கம் குறைந்த பெறுமதிசேர் வரிகள் பேணப்படுவதன் காரணமாக தொடர்ந்தும் காணப்படும்.

- **2020ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி எறிவுகளிற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு துறைகளிலிருந்து தோன்றுகின்ற மற்றும் 2020இன் இரண்டாம் காற்பகுதியின் சுருக்கத்தின் அளவு என்பவற்றால் ஏற்படுத்தப்படும் கணிசமான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன.** இரண்டாம் காலாண்டுப்பகுதியில் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவான சுருக்கம் பொருளாதாரத்தினை எதிர்மறையானதொரு நிலைக்கு இட்டுச்செல்லும். வெளிநாட்டுத் துறையிலிருந்து நோக்குகையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முக்கிய வர்த்தகப் பங்காளர் பொருளாதாரங்களில் மீட்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவாக இருப்பது புடவைத் தயாரிப்பு மற்றும் அணியும் ஆடைகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் போன்ற முக்கிய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் நடவடிக்கைகள் சிலவற்றின் மீள்உத்வேகத்தினை தாமதிக்கக்கூடும். குறிப்பாக, அபிவிருத்திகளில் தங்கியிருக்கும் சுற்றுலா நடவடிக்கைகளுக்கு இந்தியா, ஐரோப்பா போன்ற முக்கிய சில பொருளாதாரங்கள் தொற்றுக்களின் வீதத்தினைக் கட்டுப்படுத்துவதில் இன்னமும் போராடிக்கொண்டிருப்பதனால் தொற்றுடன் தொடர்பான பயணக்கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இடையூறுகளை விளைவிப்பதாகவே இருக்கும். இதன்படி, சுற்றுலாவை சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டுள்ள முழு சூழல் முறைமைகளும் பின்னரைப்பகுதியில் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடும். மேலும், நாட்டில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தொடர்ந்து ஏற்படக்கூடிய அலைகளிலிருந்தான மோசமான தாக்கம் குறிப்பாக, ஏற்றுமதி சார்ந்த தயாரிப்பு நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகளின் பாதிப்பு ஆண்டின் பின்னரைப்பகுதியில் வளர்ச்சித் தோற்றப்பாட்டின் மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கும். 2020இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட பின்னடைவுகளிலிருந்து முழுமையாக மீட்சியடைவதற்கு நடுத்தர காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் 2020 பின்னரைப்பகுதியிலும் அதற்கு அப்பாலுக்குமான காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுகளில் சாதகமான வளர்ச்சியொன்றைப் பேணுவது முக்கியமானதாகும். குறைந்த பன்முகத்தன்மையினைக் கொண்ட ஏற்றுமதி சொத்துப்பட்டியலும் ஒரு சில சந்தைகளில் மட்டும் கவனத்தினைச் செலுத்துவதும் வெளிநாட்டுத் துறையில் முக்கிய இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கும். அதேநேரம், இறக்குமதிப் பதிலீடுகளை ஊக்குவிப்பதற்கும் வெளிப்பாய்ச்சல்களைக் குறைப்பதற்கும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆதரவாக இருக்கின்ற போதும் மூலப்பொருட்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் வியாபார அளவீட்டு பங்கேற்பாளர்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு உற்பத்திச் செயல்முறைகளுக்குக் காணப்படும் தடைகளைக் குறைப்பதற்கு உடனடியாகவும் காத்திரமான விதத்திலும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். வானிலையுடன் தொடர்பான தடங்கல்கள் வேளாண்மை நடவடிக்கைகளின் சாதகமான அபிவிருத்திகளை குறைவடையச் செய்யக்கூடும். மேலும், வேளாண்மை நடவடிக்கைகளின் மீதான ஏதேனும் மோசமான தாக்கம் உணவு மற்றும் குடிபானத்துடன் தொடர்பான தயாரிப்பு நடவடிக்கைகள் போன்ற ஏனைய பொருளாதார நடவடிக்கைகளின் மீதும் வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தனியாள் பணிகள் போன்ற பணி நடவடிக்கைகளின் மீதும் கசிந்து செல்லும் தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வரிக் குறைப்புக்கள் மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கை மட்டங்கள் என்பனவற்றிலிருந்து தோன்றிய வரி அரசிறைப் பிரச்சனைகள் கூட்டுக்கேள்வியை உத்வேகப்படுத்துவதில் இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றுகின்ற இறைத் தூண்டல்கள் மற்றும் அரச முதலீட்டு நடவடிக்கைகளில் மட்டுப்படுத்தப்பட்டதொரு வசதியை மட்டுமே வழங்குகிறது. எனினும், பொதுத் தேர்தலைத் தொடர்ந்து காணப்படும் மேம்பட்ட அரசியல் உறுதிப்பாடு தனியார் துறையில் முதலீட்டுத் தீர்மானங்களை கடந்த பல ஆண்டுகளாக தாமதிக்கச்செய்த நிச்சயமற்ற தன்மையினை நீக்கி தற்போது எதிர்பார்க்கப்படுவதிலும் பார்க்க விரைவான மீட்சியொன்றினைத் தோற்றுவிக்கும்.

## பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி

### வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி

- **2020இன் முதல் காலாண்டுப் பகுதியில் வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது.** இச்சுருக்கத்திற்கு, இவ்வாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் தேயிலைப் பயிர்ச்செய்கை, நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகள், காடாக்கல் மற்றும் மரம் அறுத்தல், எண்ணெய்ப் பசையுள்ள பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை (தெங்கு, செவ்விளநீர் மற்றும் எண்ணெய்த் தாவரம்) என்பனவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே பெருமளவிற்குக்

காரணமாகும். எனினும், தானியங்கள் (அரிசி தவிர), கரும்பு, பழவர்க்கங்கள், காய்கறிகள், அரிசி மற்றும் வாசனைத்திரவியங்கள் மற்றும் விலங்கு உற்பத்திகள் என்பனவற்றின் பயிர்ச்செய்கை வேளாண்மை நடவடிக்கைகளின் சுருக்கம் மெதுவடைவதற்கு சாதகமான முறையில் பங்களித்தது.

## உற்பத்திப் போக்குகளும் நிறுவன ரீதியான ஆதரவும்: வேளாண்மை

### வேளாண்மை உற்பத்தி

- **வேளாண்மை மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் வெளியீட்டை அளிவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்[1] 2020இன் முதலரைப்பகுதியில் 7.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது (தற்காலிகம்).** இச்சுட்டெண்ணிற்குள், வேளாண்மைப் பயிர்களுக்கான துணைச் சுட்டெண் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் துணைத்துறைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சி, காய்கறிகள் மற்றும் ஏனைய களப் பயிர்களை உள்ளடக்கிய நெல் மற்றும் ஏனைய பயிர்களின் துணைத் துறைகளின் மூலம் ஓரளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டது. மேலும், விலங்கு வளர்ப்புத் துணைத் துறை ஒட்டுமொத்த வேளாண்மை வெளியீட்டிற்கு எதிர்க்கணியமான முறையில் பங்களித்து 3.3 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மீன்பிடி துணைத் துறையும் 2020இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 2.1

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010=100) (அ)

| விடயம் | 2019 முதலரை (ஆ) | 2020 முதலரை (இ) | மாற்ற வீதம் (%) 2018/19 (ஆ) | மாற்ற வீதம் (%) 2019/20 (இ) |
|---|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **131.6** | **121.7** | **3.6** | **-7.5** |
| **1 வேளாண்மை** | **127.3** | **122.7** | **4.5** | **-3.6** |
| 1.1 வேளாண்மைப் பயிர்கள் | 118.8 | 114.4 | 5.2 | -3.7 |
| நெல் | 164.3 | 171.0 | 28.2 | 4.0 |
| தேயிலை | 101.3 | 82.6 | 0.2 | -18.5 |
| இறப்பர் | 62.2 | 56.0 | 4.0 | -10.1 |
| தெங்கு | 111.2 | 96.6 | 29.3 | -13.1 |
| ஏனைய பயிர்கள் | 109.0 | 112.4 | -17.6 | 3.1 |
| *இதில்* மரக்கறிகள் | 139.5 | 150.1 | -18.1 | 7.6 |
| ஏனைய பயிர்கள் | 151.3 | 168.6 | -14.2 | 11.4 |
| 1.2 விலங்கு வளர்ப்பு | 195.0 | 188.7 | 1.2 | -3.3 |
| **2 மீன்பிடி** | **152.5** | **116.7** | **0.0** | **-23.5** |

(அ) பழவர்க்க உபபிரிவு நீங்கலாக
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

### நெல்

- **தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் வேளாண்மைத் திணைக்களம் என்பனவற்றின்படி, நெல் உற்பத்தி 2019இல் அவதானிக்கப்பட்ட அபரிமிதமான அறுவடையுடன் ஒப்பிடுகையில் 2020இல் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** இவ்வாண்டுப்பகுதியில் நெல் உற்பத்தி 2019இல் பதிவுசெய்யப்பட்ட 4.6 மில்லியன் மெற்றிக்தொன்களிலிருந்து 5.0 மில்லியன் மெற்றிக்தொன்களுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2019/20 பெரும்போகம் மற்றும் 2020 சிறுபோகம் ஆகிய காலப்பகுதிகளில் நிலவிய உகந்த வானிலை நிலைமைகள் இவ்வாண்டின் உற்பத்தியை கடந்த ஆறு தசாப்தங்களிலும் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த மட்டங்களுக்கு மேலாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2020இன் வருடாந்த நெல் உற்பத்தியில் ஏறத்தாழ 63 சதவீதத்திற்கு வகைகூறும் 2019/20 பெரும்போக காலத்தின் நெல் உற்பத்தி முன்னைய ஆண்டின் 3.2 மில்லியன் மெற்றிக்தொன் கொண்ட பெரும்போக உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 4.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தது. 2019/20 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட பரப்பளவு 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு முன்னைய பெரும்போகத்தினைவிட 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளையில், 2020 சிறுபோகத்தில் 1.8 மில்லியன் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்படுமென எதிர்வுகூறப்பட்டது. இது, முன்னைய ஆண்டின் சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 21.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கிறது. 2020 சிறுபோகத்தில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இப்பருவ காலத்தில் நெற்செய்கையாளர்களுக்கு வளமாக்கி கட்டணமின்றி இலவசமாக வழங்கப்பட்டமையும் ஓரளவு காரணமாகும். பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரு பருவ காலங்களிலுமான வருடாந்த நெல் உற்பத்தி ஏறத்தாழ 3.2 மில்லியன் மெற்றிக்தொன் அரிசிக்கு சமமானது என மதிப்பிடப்பட்டுள்ளது. இது அரிசிக்கான உள்நாட்டுக் கேள்வியின் ஏறத்தாழ 16 மாதங்களை பூர்த்திசெய்வதற்குப் போதுமானதாகும். கணிசமானளவிற்கு உயர்ந்த உள்நாட்டு நெல் உற்பத்தி அதேபோன்று செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என்பனவற்றின் காரணமாக கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 14,518 மெற்றிக்தொன் அரிசி இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் அரிசி இறக்குமதி 10,726 மெற்றிக்தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.


- **2019இலும் அதேபோன்று 2020இலும் உற்பத்தி போதுமானளவிற்குக் காணப்பட்டமைக்கிடையிலும் 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில்**

1 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணானது பழவர்க்க வகைகளின் உற்பத்தி தொடர்பான தரவுகள் கிடைக்கப்பெறாமையினால் பழவர்க்க பிரிவு நீங்கலாக கணிப்பிடப்பட்டுள்ளது.

2

வரைபடம் 2.3

நெல் உற்பத்தி




*வேளாண்மைத் திணைக்களத்தின் எறிவு

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
வேளாண்மைத் திணைக்களம்

**திறந்த சந்தையில் நெல் விலைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டன.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் நாட்டு அரிசியின் சராசரி திறந்த சந்தை நெல் விலைகள் ரூ.46.84 இற்கு 19.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சம்பாவின் சராசரி திறந்த சந்தை நெல் விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதேகாலப்பகுதியில் ரூ.49.07 இற்கு 24.4 சதவீதத்தினால் அதிகரித்தது. நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளுக்கு (உலர்ந்த) அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு விலையான கிலோ கிறாமொன்றிற்கு ரூ.50 இற்கு (மற்றும் உயர் ஈரப்பதன் கொண்ட நெல் கிலோ கிறாமொன்றிற்கு ரூ.44) மேலே நெல் இருப்புக்களைக் கொள்வனவு செய்வதற்காக தனிப்பட்ட ஆலையாளர்களுக்கிடையே காணப்பட்ட போட்டியின் காரணமாக விலைகள் மேல்நோக்கி நகர்ந்தன. இதன்விளைவாக, 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் நாட்டு அரிசியின் சராசரி சில்லறை விலை 9.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, நாட்டு அரிசியினதும் சம்பா அரிசியினதும் வெவ்வேறுபட்ட வகைகளுக்கிடையேயான சராசரி சில்லறை விலைகள் முறையே கிலோ கிறாமொன்றிற்கு ரூ.99.20 ஆகவும் கிலோ கிறாமொன்றிற்கு ரூ.101.97 ஆகவும் காணப்பட்டன. அதேவேளை, 2020 ஏப்பிறல் 10ஆம் நாளன்று அரசாங்கம் சம்பா மற்றும் நாடு இரண்டிற்குமான கிலோ கிறாமொன்றிற்கான உயர்ந்தபட்ச சில்லறை விலையாக ரூ.90.00இனை விதித்தது. எனினும், ஆலையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் தமது உற்பத்திச் செலவிலும் பார்க்க குறைவானது எனக் குறிப்பிட்டு இந்நிருவாக விலைக்கு தமது இருப்புக்களை விற்பனை செய்வதற்குத் தயக்கம் காட்டினர். இது சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தியதால், அரசாங்கம் நாடு மற்றும் சம்பா அரிசிகளுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலையினை 2020 மே 28ஆம் நாளன்று முறையே கிலோ கிறாமொன்றிற்கு ரூ.96.00 இற்கும் கிலோ கிறாமொன்றிற்கு ரூ.98.00 இற்கும் திருத்தியது.


### தேயிலை

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் தேயிலை உற்பத்தி 177.3 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 16.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் நிலவிய வறண்ட வானிலை நிலைமைகள் கொவிட்-19 முடக்கத்தின் காரணமாக தேயிலை பறித்தல் மற்றும் தொழிற்சாலை நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட மழை வானிலை நிலைமைகள் என்பன இக்காலப்பகுதியில் தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சிக்கு காரணமாயின. 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் மொத்த தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 83 சதவீதத்திற்கு கூட்டாக வகைகூறும் உயர்நில மற்றும் தாழ்நில தேயிலை வகைகள் முறையே 8.7 சதவீதத்தினாலும் 20.0 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. மேலும், நடுத்தரநில தேயிலையின் உற்பத்தி 30.4 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **உள்நாட்டுச் சந்தையிலும் அதேபோன்று பல முக்கிய தேயிலை உற்பத்தி நாடுகளிலும் தேயிலை நிரம்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பதிலிறுத்துகின்ற விதத்தில் கொழும்பு ஏலங்களில் தேயிலை விலைகள் பெருமளவிற்கு அதிகரித்தன.** 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் சராசரி தேயிலை

வரைபடம் 2.4

தேயிலை உற்பத்தி




*மூலம்:* இலங்கைத் தேயிலைச் சபை

2

விலைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 15.5 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன்படி, ஆய்விற்குரிய காலப்பகுதியில் சராசரி தேயிலை விலைகள் கிலோ கிறாமொன்றிற்கு ரூ.630.80 சதவீதமாகக் காணப்பட்டது. 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் கொழும்புத் தேயிலை ஏலங்களில் சராசரி தேயிலை விலைகளில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மிகஉயர்ந்த அதிகரிப்பு தாழ்நில தேயிலைக்காக பதிவுசெய்யப்பட்டதுடன் (16.7 சதவீதம்) அதனைத் தொடர்ந்து நடுத்தரநிலத் தேயிலையும் (16.6 சதவீதம்) உயர்நில தேயிலையும் (12.8 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டன. தேயிலை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு கொழும்பு தேயிலை ஏலங்களுக்கு நிரம்பல் செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பகுதியளவில் காரணமாக இருந்ததுடன் இது குறைவடைந்த உற்பத்தி மட்டங்களின் காரணமாகவும் ஏற்பட்டதாகும். இந்தியா மற்றும் வங்காளதேசம் போன்ற ஒரு சில முக்கிய உற்பத்தி நாடுகளின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சீனாவில் இலங்கைத் தேயிலைக்கான கேள்வி அதிகரித்தமையும் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு பங்களித்தன. அதேவேளை, 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) 2019இன் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கிலோ கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 4.70 உடன் ஒப்பிடுகையில் கிலோ கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.60 இற்கு 0.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### இறப்பர்

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் இறப்பர் உற்பத்தி கடந்த ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 50.2 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 5.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மக்கள் நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டினைத் தொடர்ந்து பாலெடுக்கும் நாட்கள் குறைவடைந்தமையும் கேள்வியில், குறிப்பாக உலகளாவிய சந்தைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சேர்ந்து பெருமளவிற்குக் காரணங்களாயின.** ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் நிலவிய வறண்ட வானிலை நிலைமைகளும் அதன் பின்னர் காணப்பட்ட மழை நிலைமைகளும் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியைப் பாதித்தன. இக்காலப்பகுதியில் கிறேப் இறப்பர் உற்பத்தி 22.0 சதவீதத்தினால் 8.7 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் தட்டை இறப்பர் உற்பத்தி 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 25.1 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 5.9 சதவீதத்தினால் சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 33 சதவீதத்திற்கு வகைகூறும் இறப்பரின் குறித்துரைக்கப்படாத வகைகளின் உற்பத்தி 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் 16.4 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 5.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னணியில் அண்மைய மாதங்களில் இயற்கை இறப்பரின் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கினைக் கொண்டிருந்த வேளையில் 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட இறப்பர் விலைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க பொதுவாக உயர்வாகவே காணப்பட்டன.** கொழும்பு இறப்பர் ஏலங்களில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் 1 இன் விலை ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் கிலோ கிறாமொன்றிற்கு சராசரியாக ரூ.309.24 இற்கு 20.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2020 ஏப்பிறலிலிருந்து ஓகத்து வரை இடம்பெற்ற ஏலங்களின் போது நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் 1 வர்த்தகப்படுத்தப்படவில்லை. அதேவேளை, 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் சராசரி லேட்டைக்ஸ் கிறேப் IX விலை கிலோ கிறாமிற்கு ரூ.330.61 இற்கு 20.6 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏப்பிறலில் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) கடுமையாக அதிகரித்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான உலகளாவிய முடக்க நிலையின் உச்சத்தின் போது நிரம்பல் மட்டுப்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், இவ்வதிகரிப்பு தற்காலிகமானதேயாகும். 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் சராசரியாக இறப்பர் ஏற்றுமதி விலை (கஏபெ) 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கிலோ கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 1.8 உடன் ஒப்பிடுகையில் கிலோ கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.9 இற்கு 3.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

### தெங்கு

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் மொத்த தெங்கு உற்பத்தி 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 25.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** ஆய்விற்குரிய காலப்பகுதியில் வெளியீடு 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2,104 மில்லியன் காய்களிலிருந்து 1,867 மில்லியன் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு தெங்கு முக்கோணப் பிரதேசத்திலும் ஏனைய தெங்கு வளரும் பிரதேசங்களிலும் 2019இன் நடுப்பகுதியில் நிலவிய வறண்ட வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கமே காரணமாகும். தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான வழங்கல் பக்கத்தில் இடம்பெற்ற இடையூறுகள் என்பனவற்றின் இணைந்த தாக்கம் காரணமாக உற்பத்தியும் தேங்காயினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் உலர்ந்த தேங்காய் துருவல் உற்பத்தி

2

2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 30,868 மெற்றிக் தொன்களிலிருந்து 17,558 மெற்றிக் தொன்களுக்கு 43.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தேங்காய் எண்ணெய் உற்பத்தி 60.4 சதவீதத்தினால் 13,504 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தொழிற்சாலைகள் மூடப்பட்டமையும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட நடமாடுவதற்கான கட்டுப்பாடுகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. வேர்ஜின் தேய்காய் எண்ணெய் உற்பத்தி 9,062 மெற்றிக்தொன்களுக்கு 2.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் தேங்காய் எண்ணெய்யின் இறக்குமதி 2019இன் இதே காலப்பகுதியின் 2,148 மெற்றிக்தொன்களிலிருந்து 30,575 மெற்றிக்தொன்களுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. உள்நாட்டுச் சந்தையில் தேங்காய் எண்ணெய்க்கு காணப்பட்ட பற்றாக்குறையின் பின்னணியில் அரசாங்கம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் தேங்காய் எண்ணெய், வேர்ஜின் தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான சிறப்பு பண்டத் தீர்வையை பல தடவைகள் திருத்தியமைத்தது. நாட்டிற்கான தேங்காய் எண்ணெய் மற்றும் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் இறக்குமதிகளை ஊக்குவிக்கும் விதத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேங்காய் எண்ணெய் மற்றும் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை தாவர எண்ணெய் மீது விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வையிலும் பார்க்க குறைந்த மட்டத்திலேயே பேணப்பட்டது. மேலும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகளும் உடன் காய் ஏற்றுமதிகளும் முறையே 54.0 சதவீதத்தினாலும் 7.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. மாறாக, 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் மொத்த தேங்காய் உற்பத்தியில் ஏறத்தாழ 12.2 சதவீதத்தினைப் பயன்படுத்துகின்ற தேங்காய் கிறீம் மற்றும் தேங்காய் பால் உற்பத்திகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 26.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தன.

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் தேங்காய் உற்பத்தியில் காணப்பட்ட நிரம்பல் பற்றாக்குறை தேங்காய் மற்றும் தேங்காயை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகளில் கடுமையான அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தன.** இதன்படி, கொழும்பு தெங்கு ஏலங்களில் சராசரி தெங்கு ஏலங்களின் விலை 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் தேய்காய் ஒன்றின் விலை 2019இன் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட காயொன்றிற்கான ரூ.25.86 இலிருந்து காயொன்றிற்கு ரூ.48.18 இற்கு அதிகரித்தது. தேங்காயின் சராசரி சில்லறை விலை 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 39.4 சதவீதத்தினால் காயொன்று ரூ.70.20 ஆக அதிகரித்தது. அதேவேளை, தேங்காய் நிரம்பல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகளின் விளைவாக 2020 ஏப்பிறல் காலப்பகுதியில் சராசரி விலை தேங்காய் ஒன்றிற்கு ரூ.83.87 இற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும், 2020 ஓகத்து இறுதியில் விலை காயொன்றிற்கு ஏறத்தாழ ரூ.72.28 இற்கு வீழ்ச்சியடைந்தது. தேங்காயின் உயர்ந்த சில்லறை விலைகளைப் பரிசீலனையில் கொண்டு அரசாங்கம் 2020 செத்தெம்பரில் தேங்காயின் சுற்றளவு நியதிகளில் அளவிடப்பட்ட தேங்காயின் அளவின் அடிப்படையில் தேங்காய்க்கான உயர்ந்தபட்ச சில்லறை விலையினை விதித்தது. அதேவேளை, தேங்காய் எண்ணெய்யின் சராசரி விலையும் 2019 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியின் 750 மி.லீற்றர் போத்தல் ஒன்றிற்கான விலை ரூ.260.42 இலிருந்து 2020இன் தொடர்பான காலப்பகுதியில் 750 மி.லீற்றர் போத்தலுக்கு ரூ.344.61 இற்கு 32.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் உலர்ந்த தேங்காய் துருவலுக்கான சராசரி உள்நாட்டு சந்தை விலைகள் 2019இன் இதேகாலப்பகுதியின் கிலோ கிறாமொன்றிற்கான ரூ.241.52 இலிருந்து கிலோ கிறாமொன்றிற்கு ரூ.407.17 இற்கு அதிகரித்தது.

### ஏனைய களப் பயிர்கள்

- **2019/20 பெரும்போக காலப்பகுதியில் சாதகமான வானிலை நிலைமைகளின் உதவியுடன் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்தது.** இதற்கமைய, 2019/20 பெரும்போக காலப்பகுதியில் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி 420,570 மெற்றிக்தொன்களாக அமைந்து 13.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில் பயிர்செய்யப்பட்ட நிலத்தின் பரப்பும் 110,435 ஹெக்டேயர்களுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, ஏனைய களப் பயிர்களின் இறக்குமதிகள் மீது உயர்ந்த சிறப்புப் பண்டத் தீர்வைகள் விதிக்கப்பட்டமையின் விளைவாக அதிகளவு இலாபம் கிடைத்தமையானது உள்ளூர் வேளாண்மையாளர்களை உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஊக்குவித்தது. 2019/20 பெரும்போக காலப்பகுதியில் தட்டைப் பயறு, சோளம், பயறு, எள்ளு, கடலை, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் போன்ற ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில் குரக்கன், திணை, சோயா அவரை மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்திகள் முன்னைய ஆண்டின் பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு 2,069 ஹெக்டேயர்களுக்கு 21.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் இறக்குமதி பதிலீட்டுக் கொள்கைகள் 2020இல் ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தியின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய களப் பயிர்கள் மீதும் வாசனைத்திரவியங்கள்

மீதும் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறுங்காலத்தில் அத்தகைய உற்பத்திகளின் சந்தைப் பற்றாக்குறைகளை உருவாக்கக்கூடுமெனினும் அத்தகைய கொள்கைகள் குறித்துரைக்கப்பட்ட பயிர் அடிப்படையிலான தலையீடுகளுடன் இணைந்து நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் உள்நாட்டு உற்பத்திகள் மீது நேர்க்கணியமான தாக்கங்களை உருவாக்கும்.

### காய்கறிகள்

- **சாதகமான விலைகள் மற்றும் வானிலை நிலைமைகள் ஒன்றிணைந்து 2019/20 பெரும்போக காலப்பகுதியில் காய்கறிகள் துறையின் செயலாற்றத்தினை ஊக்குவித்தன.** 2019/20 பெரும்போக காலத்தில் காய்கறி உற்பத்தி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 893,930 மெற்றிக்தொன்களுக்கு 7.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் முக்கிய காய்கறிகள் உற்பத்திசெய்யும் பிரதேசங்களில் பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு 67,605 ஹெக்டேயர்களுக்கு 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2019/20 பெரும்போக காலத்தின் தொடக்கப்பகுதியில் காணப்பட்ட வானிலையுடன் தொடர்பான தடங்கல்கள் காய்கறிப் பயிர்ச்செய்கையில் தாமதமொன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் சந்தை நிரம்பலை குறைவடையச் செய்ததுடன் காய்கறிகளின் விலைகளையும் உயர்த்தியது. எனினும், அறுவடை காலம் தொடங்கியதுடன் காய்கறி விலைகள் 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு காலப்பகுதி முழுவதும் தொடர்ந்தும் குறைந்தே காணப்பட்டது. அதேவேளை, மாச்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் பொதுவாக நடைமுறையிலிருந்த பருவகாலங்களுக்கிடையிலான காய்கறிப் பயிர்ச்செய்கை கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான முடக்க நிலைமையின் விளைவாக மந்தமடைந்தது. எனினும், புத்தளம், வெலிமட மற்றும் இம்பிலிபிட்டியா போன்ற பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட காய்கறிகளின் நிரம்பல் மலைநாடு மற்றும் தாழ்நில காய்கறிப் பயிர்கள் இரண்டின் மீதுமான விலை அழுத்தங்களை கட்டுப்படுத்தவதற்கு உதவின. அதேவேளை, பருவமல்லா காலங்கள் காரணமாக 2020 ஓகத்து காலப்பகுதியில் காய்கறிகளின் சந்தை நிரம்பல் வீழ்ச்சியடைந்து காய்கறி விலைகளின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது.

### சீனி

- **2020இன் முதலரைப்பகுதியில் சீனி உற்பத்தி 2019இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 31,757 மெற்றிக் தொன்களுக்கு 31.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** இது கவர்ச்சிகரமான கரும்பு விலைகளின் விளைவாக அதிகரிக்கப்பட்ட கரும்பு பயிர்ச்செய்கையின் காரணமாக செவணகல மற்றும் கல்லோயா தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 17.2 சதவீதத்தினாலும் 101.8 சதவீதத்தினாலும் அதிகரித்தமையின் இணைந்த விளைவாகும். அதேவேளை, பெல்வத்த தொழிற்சாலையின் சீனி உற்பத்தி 2.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு அப்பிரதேசத்தின் நிலவிய வறண்ட வானிலை நிலைமைகள் மற்றும் போதுமான வளமாக்கி பிரயோகிக்கப்படாமை என்பனவற்றின் காரணமாக கரும்பின் விளைவு குறைவடைந்தமையே காரணமாகும். 2020இல் மொத்த சீனி உற்பத்தி ஏறத்தாழ 73,000 மெற்றிக்தொன்களுக்கு அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டிருக்கிறது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு சீனித் தேவையில் ஏறத்தாழ 12 சதவீதத்தைப் பூர்த்திசெய்வதற்கு போதுமானதாகவிருக்கும்.

2

### விலங்கு வளர்ப்பு

- **விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, விலங்கு வளர்ப்புத் துறை 2020இன் முதலரைப்பகுதியில் கலப்பான செயலாற்றமொன்றைக் காட்டியது.** 2020இன் முதலரைப்பகுதியில் பால் உற்பத்தி 240.7 மில்லியன் லீற்றர்களுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கொவிட்-19 முடக்கல் காலப்பகுதியில் பகுதி நேர வேளாண்மையாளர்கள் தமது மேலதிக நேரத்தினை தமது விலங்குகளைப் பராமரிப்பதிலும் கவனிப்பதிலும் செலவிட்டமையும் பால் சேகரிக்கும் கம்பனிகளினால் உயர்ந்த இலாபம் மிக்க விலைகள் வழங்கப்பட்டமையும் பெருமளவில் காரணங்களாகின. மொத்தப் பால் உற்பத்தியில் ஏறத்தாழ 88 சதவீதத்திற்கு வகைகூறும் பசுப்பால் உற்பத்தி 211.8 மில்லியன் லீற்றர்களுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.5 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், எருமைப்பால் உற்பத்தி 28.9 மில்லியன் லீற்றர்களுக்கு 15.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முடக்கல் காலப்பகுதியில் எருமைப்பால் உற்பத்திக்கான கேள்வி குறைவடைந்தமையும் எருமைகள் மேய்ச்சல் தரைகளை நாடிச் செல்பவை என்பதால் அவற்றின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டமையின் காரணமாக அவ்விலங்குகளுக்கு தீன் அளிப்பதில் காணப்பட்ட இடர்பாடுகளும் காரணங்களாக அமைந்தன. 2020இல், பால் உற்பத்தி ஏறத்தாழ 509 மில்லியன் லீற்றர்களுக்கு 20 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இது மொத்த உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 42 சதவீதத்தினை மட்டுமே பூர்த்திசெய்யப் போதுமானதாகவிருக்கும். அதேவேளை, முட்டை உற்பத்தி 1,292 மில்லியனுக்கு 2.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்த அதேவேளையில், கோழி இறைச்சி உற்பத்தி 2020இன் முதலரைப்பகுதியில் 113,820 மெற்றிக்தொன்களுக்கு 4.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. புறோயிலர் பேரன்ஸ் கோழியின் இறக்குமதி 2020இன் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பதிலிறுக்கும் விதத்தில் உயிருடனான விலங்குகளின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே காரணமாகும். இது 2020இல் முட்டையிடும் கோழி குஞ்சுகளின் கிடைப்பனவினைக் குறைத்தது. எனினும், முட்டையிடும் பேரன்ஸ் கோழிகளின் இறக்குமதிகள் இக்காலப்பகுதியில் 15.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு

2

அதிகரித்தது. மாட்டிறைச்சியினதும் ஆட்டிறைச்சியினதும் உற்பத்திகள் முறையே 34.2 சதவீதத்தினாலும் 13.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் 2020இன் முதலரைப்பகுதியில் பன்றி இறைச்சி உற்பத்தி 6.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை விலங்குத்தீன் உற்பத்திகளுக்காக அரிசியை அல்லது நெல்லினைப் பயன்படுத்துவதை தடைசெய்யும் விதத்தில் 2020.08.23 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி ஒன்றினை வெளியிட்ட அதேவேளை 2020 சனவரியிலிருந்து சோளத்தின் இறக்குமதியும் தடைசெய்யப்பட்டது. திட உணவிற்கான மூலப்பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவானது முட்டையினதும் கோழி இறைச்சியினதும் உற்பத்திச் செலவு அதிகரிப்பிற்கும் உள்ளூர் சந்தையில் உயர்ந்த சில்லறை விலைகளுக்கும் வழிவகுத்தது. எனினும், உள்நாட்டு மூலப்பொருட்களின் அதிகரித்த உற்பத்தி எதிர்வரும் காலத்தில் சந்தையினை மிக விரைவில் அடையும் என்பதனால் இவ்விலை உயர்வு குறுகிய காலத்திற்கு மட்டுமே காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மீன்பிடி

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் மீன் உற்பத்தியானது கடல் மீன்பிடி உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் காரணமாக 283,485 மெற்றிக்தொன்களுக்கு 15.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் மோசமான வானிலை நிலைமைகள் என்பன கடல் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறுகளைத் தோற்றுவித்தமையே உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். இதற்கமைய, கடல் மீன் உற்பத்தி 222,270 மெற்றிக்தொன்களுக்கு 20.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. கடல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஆழ்கடல் துணைத் துறை மற்றும் கரையோர மற்றும் கடல்நீரேரி துணைத் துறைகள் இரண்டும் காரணங்களாக அமைந்ததுடன் இவை முறையே 19.4 சதவீதம் மற்றும் 20.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. உள்நாட்டு மீன்பிடி மற்றும் உள்நாட்டு வளர்ப்பு மீன் உற்பத்தி முறையே 7.5 சதவீதத்தினாலும் 5.7 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில் 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் இறால் பண்ணை உற்பத்தி 12.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, உள்நாட்டு மீன் உற்பத்தி 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் 5.6 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் முக்கிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்கள் உயர்வடைந்தமையின் காரணமாக உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் பிரதேசங்கள் குறைவடைந்த வேளையில் கொவிட்-19 முடக்கம் காரணமாக மீனவர்களின் நடமாட்டங்கள் குறைக்கப்பட்டமையும் குறைந்த மீன்பிடிக்கு வழிவகுத்தன. மேலும், மீன் வழங்கல் சங்கிலிக்கு ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் முடக்க காலப்பகுதியில் மீன் சந்தைகள் மூடப்பட்டமையின் காரணமாக கணிசமான தொகை மீன்கள் வீணாகிப்போனமையும் அவதானிக்கப்பட்டது. ஆகவே, அரசாங்கம் மீன் வழங்கல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதியை வழங்கிய வேளையில் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் மீன்பிடிக் கலங்களிலிருந்து மீனைக் கொள்வனவு செய்வதனை விரைவுபடுத்தியது. எனினும், முடக்க காலப்பகுதியில் வீட்டுத்துறையினரிடமிருந்தான குறைந்த கேள்வி மீன் உற்பத்தியை ஊக்கமிழக்கச் செய்தமையினால் ஊரடங்கு காலப்பகுதியில் மீன் விலைகள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் தற்காலிகமாக மூடப்பட்டமை மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் மெதுவடைந்தமை என்பனவும் மீன்பிடித் துறையினை மோசமாகப் பாதித்தன. அதேவேளை, உலகளாவிய வசதி ஏற்பாட்டுப் பிரச்சனைகள் மற்றும் ஏற்றுமதி நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வி என்பனவற்றின் காரணமாகவும் மீன் ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டன. இருப்பினும்கூட, உள்நாட்டு முடக்க நிலைமைகள் தளர்த்தப்பட்டமையின் காரணமாக இரண்டாம் காற்பகுதியின் இறுதியிலிருந்து உள்நாட்டு விலைகளில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### கைத்தொழில்கள்

- **2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** இப்பின்னடைவிற்கு கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் மற்றும் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகள் குறிப்பாக புடவை மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்பு என்பவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளில் அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கமே பெருமளவிற்கு காரணமாக அமைந்தது. எனினும், மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல், நீர் சேகரிப்பு, நீர் சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் வடிகால்கள், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் என்பன இக்காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மொத்த விரிவாக்கத்திற்கு சாதகமாகப் பங்களித்தன.

- **கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் உயர்ந்த வேகத்தில் சுருக்கமடைந்தமைக்கு பாரிய செயற்றிட்டங்கள் இல்லாமை, துறையில் காணப்பட்ட காசுப்பாய்ச்சல் பிரச்சினைகள் மற்றும் 2020இன் முதலாம் காலாண்டுப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முடக்கலுடன் தொடர்பான இடையூறுகள் என்பன காரணங்களாக அமைந்தன.** இதற்கமைய, 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட முறையே 6.9

சதவீதம் மற்றும் 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், முறையே 16.0 சதவீதத்தினாலும் 18.3 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் காணப்பட்ட இச்சுருக்கம் 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் சீமெந்து கிடைப்பனவு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கெதிராக 16.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமையின் மூலம் பகுதியளவில் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2019இன் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கெதிராக 29.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

- **2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தன.** முன்னைய ஆண்டின் தொடர்பான காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் மொத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கத்திற்கு புடவைத் தயாரிப்பு, அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு, இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள், தளபாடத் தயாரிப்பு மற்றும் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு என்பனவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே பெருமளவிற்குக் காரணமாகும். எனினும், உணவுத் தயாரிப்பு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், அடிப்படை உலோகத் தயாரிப்பு, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பன நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன. ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் மின்வலு, வாயு, நீராவி, குளிரூட்டி வழங்கல் நடவடிக்கைகள், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள், வடிகால்கள், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களான 1.9 சதவீதம், 6.3 சதவீதம் மற்றுமு் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 2.3 சதவீதத்தினாலும் 5.0 சதவீதத்தினாலும் 1.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன.


## உற்பத்திப் போக்குகளும் நிறுவன ரீதியான ஆதரவும்: தயாரிப்பு நடவடிக்கைகள்

### கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

- **யூலை மாதம் தவிர, 2020ஆம் ஆண்டின் ஒகத்து வரையான ஒவ்வொரு மாதங்களிலும் தயாரிப்புத்துறை ஆண்டிற்கு ஆண்டு சுருக்கத்தினைக் காட்டியமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளே காரணமாக அமைந்தன.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, தயாரிப்புத் துறையின் வளர்ச்சி 2020ஆம் ஆண்டின் முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் முறையே 10.2 சதவீதம் மற்றும் 28.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்திருக்கின்ற வேளையில் 2020இன் முதலரைப்பகுதியில் 19.2 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த சுருக்கமொன்று பதிவுசெய்யப்பட்டது. தயாரிப்புத் துறையின் வளர்ச்சி 2020 மாச்சிலிருந்து யூன் வரையான மாதங்களில் கணிசமாக வீழ்ச்சியடைந்து 100 புள்ளிகளுக்கும் கீழேயேயான சுட்டெண் பெறுமதியை பதிவுசெய்தது. குறிப்பாக, கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2020 ஏப்பிறலில் 49.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட பெறுமதியனைப் பதிவுசெய்தது. இது 2015இல் இச்சுட்டெண் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற மிகக்குறைந்த செயலாற்றமாகும். 2020இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் பெரும்பாலான துணைத் துறைகளிடையேயான தயாரிப்பு நடவடிக்கைகள் தேய்வடைந்த வேளையில் உணவு உற்பத்திகள், அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புக்கள் துணைத் துறைகளின் நடவடிக்கையில் சிறிதளவு விரிவாக்கம் பதிவுசெய்யப்பட்டது. இதற்கு, அத்தகைய பிரிவுகளின் இன்றியமையாத தன்மை காரணமாக இருக்கக்கூடும். 2020இன் யூலை மாதத்தில் நடமாடும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை, வேலைத்தளங்கள் மீளத் திறக்கப்பட்டமை மற்றும் பொருளாதாரம் படிப்படியாக வழமைக்குத் திரும்பியமை என்பனவற்றின் காரணமாக ஒட்டுமொத்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் முன்னேற்றத்திற்கான சமிக்ஞைகளைக் காட்டியதுடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சாதகமான வளர்ச்சியொன்றையும் பதிவுசெய்தது. அதனைத்தொடர்ந்து 2020 ஒகத்தில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. 2020 ஒத்தோபரில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீண்டும் கிளர்ந்தெழுந்திருப்பதன் காரணமாக தயாரிப்புத் துறை தொழிற்சாலைத் தொழிற்பாடுகளை தொடரக்கூடிய தன்மை காணப்படாமை, உள்நாட்டு கேள்வி மெதுவடைகின்றமை மற்றும் உரிய கட்டளைகளைப் பெறுவதன் மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய வெளிநாட்டுக் கேள்வி பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பனவற்றின் காரணமாக தயாரிப்புத் துறை மேலும் பின்னடைவுகளை அனுபவிக்கக்கூடும். எனினும், வேளாண் மற்றும் இயற்கை மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் அண்மைக்கால முன்னெடுப்புக்கள் இறக்குமதிப் பதிலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் நடுத்தரகாலத்தில் உள்நாட்டு கைத்தொழில் துறையினை வலுப்படுத்துவதுடன் எதிர்பார்க்கப்படுவதுடன் இது கைத்தொழில் ஏற்றுமதிகளையும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரைபடம் 2.5

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


- **உணவுத் தயாரிப்புத் துறை முடக்க நடவடிக்கைகளின் காரணமாக குறைந்தளவிற்கு பாதிக்கப்பட்ட போதும் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகள் 2020 மாச்சு, ஏப்பிறல் மற்றும் மே மாதங்களில் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கத்தைப் பதிவுசெய்தன.** பரிசீலனைக்குட்பட்ட காலப்பகுதியில், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் மிகப்பெரும் துணைத் துறையாக விளங்கும் உணவு உற்பத்தி தயாரிப்புக்கள் 2020 மாச்சு மற்றும் ஓகத்து மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு வீழ்ச்சிகளைத் தவிர மற்றை அனைத்து மாதங்களிலும் வளர்ச்சியடைந்திருந்தன. பால்மா, கோதுமை மா, அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் பிஸ்கோத்து வகைகளின் அதிகரித்த உற்பத்தி உணவு உற்பத்தி உயர்வடைவதற்குப் பங்களித்தன. மாறாக, 2020 மாச்சிலிருந்து மே வரையான காலப்பகுதியில் குடிபான துணைத் துறையின் தயாரிப்பு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு பியர், சாராயம் மற்றும் மென் குடிபானம் போன்ற மதுசாரமல்லா குடிபான உற்பத்திகள் என்பனவற்றின் குறைந்த உற்பத்தியே இதற்குக் காரணமாகும். உணவகங்கள் மற்றும் குடிவகைக் கடைகள் மூடப்பட்டமையும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் குறைவடைந்தமையும் குடிவகைத் தொழில் துறையினை மோசமாகப் பாதித்தன. எனினும், குடிவகை தயாரிப்பு நடவடிக்கைகள் 2020 யூன் மாதத்திலிருந்து சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

- **ஆடை மற்றும் புடவைகள் ஏற்றுமதிக் கைத்தொழில்கள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கணிசமானளவு பாதிக்கப்பட்டமைக்கு பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளிலிருந்தான ஏற்றுமதிக் கட்டளைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மட்டுமன்றி நடமாடல் கட்டுப்பாடுகளின் விளைவாக தொழிலாளர் கிடைப்பனவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையும் காரணங்களாக அமைந்தன.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 20 சதவீதத்திற்கு வகைகூறும் அணியும் ஆடைகள் துணைத் துறையின் தயாரிப்பு இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் எதிர்க்கணியமான வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தமைக்கு ஏற்றுமதி நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வி உலகளாவிய வழங்கல் சங்கிலிக்குக் காணப்பட்ட இடையூறுகள் உள்நாட்டு நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் மாச்சு நடுப்பகுதியிலிருந்து ஏப்பிறல் இறுதிவரை தொழிற்சாலைகள் தற்காலிகமான மூடப்பட்டமை என்பன காரணங்களாக அமைந்தன. இதற்கமைய, அணியும் ஆடைகள் துணைத் துறையில் சுருக்கம் 2020 ஏப்பிறலில் உச்ச மட்டத்தை அடைந்தது. நடமாட்டக் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டமையினைத் தொடர்ந்து மே மாத தொடக்கத்திலிருந்து பெரும்பாலான தொழிற்சாலைகள் வழமைக்குத் திரும்பினதெனினும், துணைத்துறை அதனைத் தொடர்ந்துவந்த மாதங்களில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொடர்ந்தும் சுருக்கத்தைப் பதிவுசெய்து உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையினைப் பிரதிபலித்தது. முக்கியமாக புடவை வகைகளின் நெய்தல் மற்றும் மெருகுபடுத்தல் என்பனவற்றை உள்ளடக்கிய புடவை தயாரிப்புக் கைத்தொழிலும் பெப்புருவரியிலிருந்து மே வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கத்தைப் பதிவுசெய்ததெனினும் 2020 யூனிலிருந்து இத்துறையானது நேர்க்கணியமாக வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தது. தென்னந்தும்பு மற்றும் துணி வகைகளின் மெருகூட்டல் உற்பத்தி முடக்ககாலத்திற்குப் பின்னர் மீண்டும் வளர்ச்சி உத்வேகத்தினைக் கொண்டிருந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கவனத்தில்கொள்கையில் குறிப்பிட்ட முக்கிய ஆடை உற்பத்தியாளர்கள் தனியாள் பாதுகாப்புச் சாதனங்களின் உற்பத்திக்கு மாறிக்கொண்டதுடன் இலங்கையின் இவ் உற்பத்திகள் ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சிறிய சிறப்புவாய்ந்த சந்தைப் பிரிவுகளில் விரைவாக அதிகரித்துவரும் தனியாள் பாதுகாப்புச் சாதனங்களுக்குப் புறம்பாக ஒப்பீட்டு ரீதியில் நெகிழ்ச்சியற்ற கேள்வியைக் கொண்டிருக்கும் ஆடம்பரம் மற்றும் உயர் பெறுமதிகளைக் கொண்ட ஆடைகள் போன்ற ஏனைய வாடிக்கையாளர் சிறப்புச் சந்தைகளுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதும் நுழைவதும் இம்முக்கிய தொழில்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகவிருக்கும்.

- **யூலை மாதம் தவிர, ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகத் தயாரிப்புக்கள் துணைத் துறைகளும் 2020இன் ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கத்தைப் பதிவுசெய்தன.** தரை ஓடுகள், சீமெந்து, கண்ணாடிப் போத்தல்கள், மட்பாண்டத்தினை அடிப்படையாகக் கொண்ட மெருகூட்டப்பட்ட சுவர் ஓடுகள் என்பனவற்றின் குறைந்த உற்பத்திகள் இத்துணைத் துறையின் மெதுவான போக்கிற்கு பெருமளவிற்குப் பங்களித்தன. உள்நாட்டு கட்டடவாக்கத் துறை மற்றும் உலகளாவிய சந்தைகளிலிருந்தான குறைவடைந்த கேள்வியும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தித் துணைத்

வரைபடம் 2.6

கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




குறிப்பு: அடைப்புக்குறிக்குள் உள்ள பெறுமானங்கள் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணிலுள்ள துணைப்பிரிவுகளின் நிறையேற்றங்கள் ஆகும்.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

துறையின் குறைந்த உற்பத்திக்கு பங்களித்தன. எனினும், மற்றைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துணைத் துறை 2020 யூலையில் சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்ததெனினும், இம்மீட்சியானது குறைந்த உள்நாட்டு கேள்வியின் காரணமாக குறுகிய காலத்திற்கே காணப்பட்டது. அதேவேளை, கப்பல் கட்டுதல் மற்றும் திருத்த நடவடிக்கைகளை முக்கியமாக உள்ளடக்கிய உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத் துறையும் இதேபோக்கினையே கொண்டிருந்தது. அலுமினிய உற்பத்திகள், ஈய ஒக்சயிற் மற்றும் களஞ்சியப்படுத்தி வைக்கும் தாங்கிகள் என்பவற்றின் குறைவடைந்த உற்பத்தியும் இத்துணைத் துறை சுட்டெண்ணின் சுருக்கத்திற்கு வழிவகுத்தது.

- **கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் தயாரிப்பின் துணைத் துறை இவ்வாண்டின் ஓகத்து வரையான பெரும்பாலான மாதங்களில் குறிப்பிடத்தக்க எதிர்க்கணியமான வளர்ச்சியைக் காட்டின.** இவ்வீழ்ச்சிக்கு உள்நாட்டுச் சந்தையில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்குக் காணப்பட்ட குறைந்த கேள்வியும் 2020 பெப்புருவரி 15 இலிருந்து 45 நாட்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையம் பகுதியளவில் மூடப்பட்டிருந்தமையும் முக்கிய காரணங்களாகும். எனினும், 2020 மேயில் இத்துணைத் துறையினால் 2019இன் இதேமாதகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 41.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமைக்கு முன்னைய ஆண்டின் இதே மாதத்தில் திருத்த வேலைகளுக்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தமை காரணமாகும்.

- **கொவிட்-19 உடன் தொடர்பான முடக்க நிலைமைகள் இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு, புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகங்களின் அச்சிடல் மற்றும் மீள் தயாரிப்பு என்பனவற்றினைப் பாதித்த போதும் முடக்கல் நிலைமைகள் தளர்த்தப்பட்டதுடன் 2020 யூனிலிருந்து இத்துணைத் துறைகளில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது.** இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறை நாடளாவிய ஊரடங்கு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தமைக்கு தீந்தைகள், வளமாக்கி மற்றும் பொலித்தீன் பைகள் என்பனவற்றின் உற்பத்திகள் குறைவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். புகையிலை உற்பத்திகள் மீதான உயர்மட்ட வரிகளுக்கு மேலதிகமாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் புகையிலை, நிறமூட்டல்கள் மற்றும் சிகரெட் என்பனவற்றிற்கு குறைவடைந்த நுகர்வோர் கேள்வி முடக்க காலப்பகுதியில் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு குறைவடையக் காரணமாயிற்று. எனினும், 2020 யூனிலிருந்து கேள்வியும் உற்பத்தியும் அதிகரிக்கத் தொடங்கின. அதேவேளை, பதிவுசெய்யப்பட்ட ஊடகங்களின் மீள் தயாரிப்பும் இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து சுருக்கத்தினைக் காட்டியதெனினும், துணைத் துறை 2020 யூனிலிருந்து வளர்ச்சி உத்வேகத்தை மீண்டும் பெற்றது.

- **இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு, தோல் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள், மின்னியல் கருவிகள், தாள் மற்றும் தாள் உற்பத்திகள் மற்றும் தளபாடம் தவிர்ந்த மர உற்பத்திகள் என்பனவற்றுடன் தொடர்பான துணைத் துறைகள் நாடளாவிய முடக்கல் விதிக்கப்பட்டமையின் காரணமாக வீழ்ச்சியடைந்து 2020 ஓகத்துவரை குறைவான செயலாற்றத்தினையே பதிவுசெய்தது.** இறப்பர் விரிப்புக்கள், பிளாத்திக்குப் போத்தல்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் பிரேசில் போன்ற பன்னாட்டுச் சந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற டயர்கள் என்பனவற்றின் குறைந்த உற்பத்தி உலகளாவிய தயாரிப்புக் கைத்தொழில் இருந்தான குறைவடைந்த கேள்வியுடன் சேர்ந்து இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறையின் மெதுவான போக்கிற்கு காரணமாயின. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக கைத்தொழில் மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கான கையுறைகளுக்கான ஏற்றுமதிக் கேள்வி ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கான உயர்ந்த ஏற்றுமதிகளுடன் சேர்ந்து கணிசமாக விரிவடைந்தது. கொவிட்-19 தொடர்பான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதனால் அத்தகைய கைத்தொழில்கள் உறுதியான ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகள் இரண்டிலும் காணப்படும் குறைவடைந்த கேள்வியானது தோல், தோல் பைகள், சப்பாத்துக்கள் மற்றும் ஜக்கெட்டுக்கள் போன்றவற்றுக்கான உற்பத்தியில் வீழ்ச்சிக்கு வழிவகுத்து இத்துறையின் மோசமான செயலாற்றத்திற்குப் பங்களித்தன. முடக்கல் காலப்பகுதியில் நீண்டகால நுகர்வுப் பொருட்களுக்கான குறைவடைந்த உள்நாட்டுக்

2

கேள்வி குறைந்த உற்பத்தியைத் தோற்றுவித்து அதன் மூலம் மின்னியல் சாதனங்களின் தயாரிப்புத் தொடர்பான துணைத் துறையில் சுருக்கமொன்றினை ஏற்படுத்தியது. அதேநேரம் தாள்கள், அட்டைப் பெட்டிகள், காகிதப் பைகள், பயிற்சிப் புத்தகங்கள் என்பனவற்றின் குறைவான உற்பத்தி காரணமாக 2020 பெப்புருவரியிலிருந்து தாள் மற்றும் தாள் உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறை தேய்வடைந்தது. அதேவேளை, அடிப்படை உலோகங்கள் மற்றும் தளபாடங்களின் தயாரிப்பும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் காரணமாக குறைவடைந்த வளர்ச்சியைப் பதிவுசெய்ததெனினும் ஓகத்து மாதத்தில் மீட்சியொன்றினைக் காட்டியது.

- **அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புக்கள் 2020 ஏப்பிறலிருந்து விரிவாக்கமொன்றினைக் காட்டின.** வில்லைகளின் அதிகரிக்கப்பட்ட தயாரிப்பு மற்றும் ஆயுர்வேதங்களின் அதிகரித்த உற்பத்திகள் கொவிட்-19 பின்னணியில் சுகாதாரத்துடன் தொடர்பான உற்பத்திகளுக்கான உயர்வான கேள்வியுடன் சேர்ந்து இத்துணைத் துறையின் வளர்ச்சிக்கு உதவின.

- **குறிப்பாக, கைத்தொழில் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் கைத்தொழில் துறையினைப் பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை அரசாங்கம் அடையாளம் கண்டிருக்கிறது.** “உற்பத்திப் பொருளாதாரம்” என்ற அரசாங்கத்தின் அணுகுமுறையுடன் குறித்துரைக்கப்பட்ட அம்சங்கள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் துணைத் துறைகளின் மேற்பார்வைக்காகவும் கைத்தொழில் துறையினை உத்வேகப்படுத்துவதற்கான தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்குவதற்காகவும் பல இராஜாங்க அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் தற்போதைய கொள்கை நிலையானது கைத்தொழில் துறைக்கு ஆதரவளிப்பது மட்டுமன்றி பெறுமதிச் சங்கிலியின் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய ஆதரவுகளினூடாக வேளாண்மை மற்றும் பணிகள் துறைகளுக்கான கேள்வியைத் தூண்டுவதாக காணப்படுகின்றது.

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சில பின்னடைவுகள் காணப்பட்டமைக்கிடையிலும் கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகின்ற அரச முகவர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்றன.** கனிம மூலவளங்கள் மீதான தேசிய கொள்கையொன்று இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தேசிய முன்னெடுப்பு கனிமத்தினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் பெறுமதி கூட்டலுக்கான அவற்றின் செயற்பரப்பினை விரிவாக்குவதற்கு ஏற்ற சூழலை இயலுமைப்படுத்துமெனவும் அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியினை உழைப்பதற்கான அவர்களின் உள்ளார்ந்த வளத்தினை மேம்படுத்துவதற்கு அவர்களை இயலுமைப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுறது. தேங்காயினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் காணப்படும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையிலிருந்து தோன்றுகின்ற இடையூறுகளைக் குறைப்பதற்காக சிலாபப் பெருந்தோட்டம், குருநாகல் பெருந்தோட்டம் மற்றும் தேசிய விலங்குவளர்ப்பு அபிவிருத்திச் சபை என்பன உள்ளிட்ட அரசிற்குச் சொந்தமான பல அமைப்புக்களுடன் கூட்டுத்தொழில்முயற்சிப் பங்குடமை ஒன்றுக்கு முன்மொழியப்பட்டிருக்கிறது. மேலும், தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆணைக்குழு ஆண்டின் முதலரைப்பகுதியில் விதை சான்றுப்படுத்தும் பணிகள் நிலையத்தினை மீளாய்வு செய்ததுடன் நாட்டின் ஆரம்ப மட்டத்திலுள்ள தொழில்முயற்சிகளை அடிமட்டத்திலிருந்தே அபிவிருத்தி செய்யவதற்கு விதந்துரைத்தது. அதேவேளை, இலங்கை நனோதொழில்நுட்பவியல் நிறுவனத்திலுள்ள தொழில்நுட்பவியல் மாற்றல் மற்றும் வியாபார அபிவிருத்திப் பிரிவுகள் ஆய்வுகூடமட்டச் செயற்றிட்டங்களை அபிவிருத்தி மற்றும் வர்த்தகமயப்படுத்தல் கட்டத்திற்கு தரமுயர்த்துவது தொடர்பான சாத்தியத்தினை மதிப்பிடுகின்ற வேளையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தொடர்பான அமைச்சுக்களுடன் தொடர்ந்தும் பணியாற்றுகிறது. இலங்கை நனோதொழில்நுட்பவியல் நிறுவனம் கொவிட்-19 உடன் தொடர்பான கண்டுபிடிப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்காக இலங்கைக் கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவுடன் சேர்ந்து பணியாற்றுவதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் தொழில்முயற்சியாளர்களின் பணிக்கு வசதியளிக்கின்றது. விதாத மூலவள மையமூடாக மேற்கொள்ளப்படும் தொழில்நுட்பவியல் மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட்-19 தொற்றின் காரணமாக தடங்கல்களுக்குட்பட்ட போதும் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் கணனிவழி அதேநேர முறைமையில் நடாத்தப்பட்டன. இதற்கமைய, 2020இன் முதலரைப்பகுதியில் 202 நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. அதேநேரம், 2020 மாச்சு இறுதியில் இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழு கொவிட்-19 தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான புத்தாக்க வழிமுறைகளை அடையாளம் காண்பதற்கான புதிய செயற்றிட்டங்களைத் தொடங்கியது. 2020 யூன் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவச் சாதனங்களுக்கு மாற்று ஏற்பாடாக குறைந்த செலவில் பல விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவினூடாக நிதியியல் உதவிகளை வழங்கும் நோக்குடன் வர்த்தக ரீதியாக தயாரிக்கப்படக்கூடிய உயர் சாத்தியத்தன்மைகளைக் கொண்ட 46 கண்டுபிடிப்புக்களை நிபுணர் குழு தெரிவுசெய்திருக்கிறது. அதேவேளை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் கொவிட்-19 தொடர்பான முகமூடித் துணிகள் மற்றும் கைத்தொற்றுநீக்கி உட்பட பல உற்பத்திகளைப் பரீட்சித்ததுடன் வாடிக்கையாளர் மற்றும் இலங்கைக் கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவின் கோரிக்கையின்படி புதிய பரீட்சிப்பு முறைகளும் நிறுவப்பட்டன. மேலும், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன்

கைத்தொற்றுநீக்கிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையில் அதிகரித்துவரும் கேள்வியைப் பூர்த்திசெய்யும் விதத்தில் குறிப்பாக, உணவு மற்றும் மூலிகைத் துறைகளில் புதிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தொழில்நுட்பவியல் மாற்றல்கள் மற்றும் தொழில்நுட்பவியல் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் ஈடுபட்டுவருகிறது.

- **கைத்தொழில் சம்மேளனங்களும் ஏனைய தொடர்பான நிறுவனங்களும் உள்நாட்டு கைத்தொழில் துறையினை மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் பல்வேறுபட்ட முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.** தேசிய வர்த்தகச் சம்மேளனம் 2020இன் முதலரைப்பகுதியில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான அறிவினையும் தரத்தினையும் கூட்டுவதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. தேசிய வர்த்தகச் சம்மேளனம் வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பில் வெளிநாட்டுத் தூதரகங்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. தேசிய வர்த்தகச் சம்மேளனம் இலங்கைக் கம்பனிகள் உலகளாவிய சந்தைகளில் அவற்றின் உற்பத்திகளையும் பணிகளையும் ஊக்குவிப்பதனை ஆதரவளிக்கும் நோக்குடன் 2020 சனவரியில் நிகழ்நிலை முகப்பொன்றினை நிறுவியது. அதேவேளை, இலங்கை வர்த்தகச் சம்மேளனம் வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக தொடர்ந்தும் பல்வேறு வர்த்தகத் தூதுக்குழுக்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், வெப்தளத் தொடர்கள், வர்த்தக அரங்கங்கள் போன்றவற்றிற்கு தொடர்ந்தும் வசதியளித்த வேளையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் வியாபாரங்களை மீட்டெடுப்பதனைக் கவனத்திற்கொண்டு பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இலங்கை வர்த்தகச் சம்மேளனமும் வியாபாரம், வர்த்தகம் மற்றும் தொழிலாளர் சந்தைகளின் மீது கொவிட்-19 இன் தாக்கத்தை ஆய்வுசெய்வதற்காக பல அளவீடுகளை மேற்கொண்டிருக்கிறது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில், கிராம மட்டங்களிலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டல் மற்றும் ஆதரவளித்தல் என்பவற்றுடன் தொடர்பான தொழில்முயற்சிக் கிராமங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தி தரமுயர்த்துவதில் ஈடுபட்டிருந்த போதும் கொவிட்-19இன் உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாக இது மெதுவான வேகத்திலேயே காணப்பட்டது.

- **வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான முக்கிய வசதிப்படுத்துநர்கள் என்ற ரீதியில் முதலீட்டுச் சபையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் கொவிட்-19 நோய்த்தொற்றின் பின்னணியில் கைத்தொழில்முயற்சிகள் தொடர்ந்து இயங்குவதனையும் அவற்றின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டன.** பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவணங்களை நேரடியாக சமர்ப்பிக்க முடியாமலிருப்பது தொடர்பான பிரச்சனையினைத் தீர்ப்பதற்காக முதலீட்டுச் சபை இலங்கை சுங்கத்தின் ஒத்துழைப்புடன் முதலீட்டுச் சபையின் ஏற்றுமதியாளர்களுக்காக காகிதாதிகளற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவணப்படுத்தல் செயன்முறைப்படுத்தலொன்றினை நடைமுறைப்படுத்தியது. முதலீட்டுச் சபை, சுங்கத் தீர்வைகள் செலுத்துவதற்கு பொறுப்புடையதாக தெரிவுசெய்யப்பட்ட மூலப்பொருட்களின் இறக்குமதிகளுக்காக கணனிவழி அதேநேர ஒப்புதல் வசதியொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. முதலீட்டுச் சபை, இலங்கைச் சுங்கத்தின் தனியொரு நிலையத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில் காகிதாதிகளற்ற தீர்வுமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. 2020இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபை தனியாள் பாதுகாப்புச் சாதனங்களுக்கான அதிகரித்தவரும் கேள்வியைப் பரிசீலனையில் கொண்டு மேலதிக நடவடிக்கையொன்றாக தனியாள் பாதுகாப்புச் சாதனங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுவதற்கு ஏறத்தாழ 50 கம்பனிகளுக்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. அத்துடன், முதலீட்டுச் சபை இறப்பர் வலயம், வேளாண்மைப் பூங்கா, மீன்வளர்ப்புப் பூங்கா என்பனவற்றினை உருவாக்குவது தொடர்பில் ஆரம்ப கலந்துரையாடல்களை நடாத்தியது. முதலீட்டுச் சபை முன்னுரிமைத் துறைகளை முக்கிய கவனத்திற்கொண்டு “இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மீள்விம்பப்படுத்தல்” என்ற அனைத்தையுமுள்ளடக்கிய புதிய உபாயமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆரம்பக் கட்டமொன்றினை அபிவிருத்தி செய்து ஆரம்பித்தது. இதற்கமைய வளர்ச்சியைத் தூண்டுவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காக நன்கு அமைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினைப் பின்பற்ற இருக்கிறது. முதலீட்டுச் சபை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் இரண்டினையும் கவர்வதற்காக விசேட பொருளாதார வலயங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கிறது. இது தொடர்பில், அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அரபொக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் மருந்தாக்கல் வலயமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மேலும், முதலீட்டுச் சபை 300 ஏக்கர் நிலப்பரப்பில் ஏறாவூரில் புடவை வலயமொன்றினை நிறுவுவதற்கான செய்முறைகளிலும் ஈடுபட்டு வருகிறது. உத்தேசிக்கப்பட்ட வலயமானது உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் இரண்டிற்கும் பணியாற்றுகின்ற விதத்தில் துணித் தயாரிப்பு மையமொன்றாகச் செயற்படும் அதேவேளை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 2020 மாச்சு நடுப்பகுதியில் நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு

2

முன்பாக பல வர்த்தகக் கண்காட்சிகள், சந்தை வெளிப்படுத்துகை, சந்தை அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி, இயலாற்றல் அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இதற்கமைய, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்காக மத்திய கிழக்குச் சந்தைகள், ஐக்கிய அமெரிக்கா, பிரேசில் மற்றும் யப்பான் என்பனவற்றின் பிரதிநிதிகளுடன் வாங்குபவர்-விற்பவர் கூட்டங்களையும் நேரடியான கூட்டங்களையும் மெய்நிகர் வியாபாரத்திற்கு வியாபாரம் என்ற அடிப்படையிலான கூட்டங்களையும் நடாத்தியது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் உடல்நலச் சுற்றுலாச் சங்கமும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சபையோரை இலக்காகக் கொண்டும் இலங்கையரின் நலக் கவனிப்புச் சுற்றுலாத் துறையின் மீதான விழிப்புணர்வினையும் ஈடுபாட்டினையும் உருவாக்கும் விதத்திலும் வெப்தள தொடர்களை நடாத்தின. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏனைய தொடர்பான நிறுவனங்களுடன் சேர்ந்து ஏற்றுமதியாளர்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உதவுவதற்கும் நடைமுறைகள் தொடர்பிலான தேவையான வழிகாட்டல்களைவழங்குவதற்கும் “உதவிப் பீடம்” ஒன்றை உருவாக்கியது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னணியில் பாரம்பரியமற்ற ஏற்றுமதி நாடுகள் தொடர்பிலான அவசரத் தேவைகளைக் கண்டறியும் பின்னணியில் இலங்கை ஏற்றுமதிக் கம்பனிகளுக்கும் உலகளாவிய சந்தைகளுக்குமிடையிலான இணைப்புக்களை நிறுவுவது தொடர்பில் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடனான செயல்முறைகளுக்கு இவ்வுதவிப் பீடம் வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதியாளர்கள் எதிர்காலத்தில் அவர்களது ஏற்றுமதிகளின் அளவுகளை அதிகரிப்பதற்கு ஊக்குவிக்கும் விதத்தில் ஏற்றுமதித் தூண்டல் வெகுமதித் திட்டமொன்றினை முன்மொழிந்திருக்கிறது.

- **இலங்கை அரசாங்கம் இலங்கை மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள், சுயவேலைவாய்ப்புக்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு படுகடன் நிவாரணம், படுகடன் சட்ட இசைவுத் தாமதம் மற்றும் தொழிற்படு மூலதனக் கடன் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய விரிவான பொதியொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது.** இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்தின் ஆலோசனையுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக மூன்று கட்டங்களில் “சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்ட வசதியினை” மூன்று கட்டங்களாக அறிமுகப்படுத்தியிருக்கிறது. அத்தகைய கடன்கள் ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டியில் ஆறு மாத சலுகைக் காலம் உட்பட 24 மாதங்களில் மீளச்செலுத்தப்பட வேண்டியவை ஆகும். இத்திட்டமானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு மொத்தமாக ரூ.150 பில்லியன்களை பகிர்ந்தளிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. 2020 ஒத்தோபர் 15இல் உள்ளவாறு கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களிலிருந்து பெறப்பட்ட ரூ.178 பில்லியன் பெறுமதியான 61,907 கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளித்தது. மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர் கொடுகடன் திட்டம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கூரையில் பொருத்தப்பட்ட சூரியவலு உருவாக்க தொடர் கொடுகடன் திட்டம் என்பன 2020இன் முதரைப்பகுதியிலும் தொடர்ந்தன. யூன் இறுதியளவில் இவ்விரண்டு கொடுகடன் திட்டங்களின் கீழும் ஏறத்தாழ ரூ.30.8 பில்லியன் வழங்கப்பட்டது.

## பணிகள்

- **2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் பொருளாதாரத்தின் மிகப்பெரும் பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பணிகள் நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து கிடைத்த பெருமளவு ஆதரவே காரணமாகும். மேலும், தொலைத்தொடர்பூட்டல், கல்வி, பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு, தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் தகவல் தொழில்நுட்பவியல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆலோசனை, மனித நல நடவடிக்கைகள், அஞ்சல் மற்றும் கூரியர் பணிகள் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளும் சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் இக்காலாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தன.

### மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

- **2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் என்பன 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் 4.1

சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய காரணமாகும். மேலும், 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து என்பன 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் முறையே 6.2 சதவீதத்தினாலும் 0.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு மாச்சு நடுப்பகுதியிலிருந்து நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் மீதான கட்டுப்பாடுகளும் நாட்டின் முடக்க நிலையும் காரணங்களாக அமைந்தன. 2019இன் முதற்காலாண்டுப்பகுதியில் இவை முறையே 4.6 சதவீதம் மற்றும் 2.7 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்திருந்தன. 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் சுற்றுலாவுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைள் மற்றும் போக்குவரத்தில் குறைக்கப்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் இரண்டும் 2019இன் இதேகாலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 31.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளையில், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் சேவையாற்றப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர் 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் 15 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

## தகவல் மற்றும் தொடர்பூட்டல்

- **2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள், 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 15.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** இது முக்கியமாக முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட17.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் பணிகள் 15.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததற்கு முடக்கல் காலப்பகுதியில் நடமாடலுக்கான கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான முன்னெடுப்புக்கள் என்பனவற்றின் காரணமாக தனிப்பட்டவர்கள்/வதிவிடத் துறையினரிடமிருந்து தொலைத்தொடர்பூட்டல் பணிகளுக்காக எழுந்த பெருமளவு கேள்வி ஆதரவாக அமைந்தது. மேலும், நாட்டின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயன்முறை முகாமைத்துவத் தொழில்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிநிரல்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளும் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் 9.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளையில், 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் செவிப்புல கட்புலத் தயாரிப்புக்கள் என்பன முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் கொண்ட மெதுவான வீதத்தில் வளர்ச்சியடைந்தன.

## நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

- **நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் 6.1 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதமொன்றில் வளர்ச்சியடைந்தது.** இதற்கு 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். மேலும்,2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் வதிவிடச் சொத்துடமை நடவடிக்கைகள் உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இத்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதமாகப் பங்களிக்கின்ற விதத்தில் 4.2 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதமொன்றில் வளர்ச்சியடைந்தது. மேலும், காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இக்காலாண்டுப்பகுதியின் போது 0.2 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது.

## தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள்

- **2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் தொழில்சார் நிபுணத்துவ பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதத்தினால் விரிவடைந்தன.** 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் ஏனைய தனியாள் பணிகள் மற்றும் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியை பதிவுசெய்தமையே இப்பிரிவில் காணப்பட்ட வளர்ச்சிக்கு முக்கியமாக

ஆதரவளித்தது. மேலும், 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலாண்டுப்பகுதியில் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் 1.6 சதவீதம் கொண்ட மெதுவான வீதத்தில் விரிவடைந்தன.

2

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிகள் நடவடிக்கைகள்

- **2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிகள் நடவடிக்கைகள், 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்ப்பட்ட 1.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் கல்வி நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதத்தினால் விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். மேலும், பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்பான பணிகள் 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது. அதேநேரம், 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் மனித நல நடவடிக்கைகள், வதிவிடப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் மீட்சியடைந்து முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீத சுருக்கத்திற்கெதிராக 1.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

### செலவினம்

- **பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்களின் கூட்டுத்தொகையாக விளங்கும் மொத்த உள்நாட்டுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.8 சதவீத சுருக்கத்திற்கெதிராக 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு உள்நாட்டுச் சந்தையில் நிலவிய உயர்ந்த விலைகளினால் முக்கியமாகத் தூண்டப்பட்ட நுகர்வுச் செலவினத்தில் அவதானிக்கப்பட்ட விரிவும் அதேவேளையில் முதலீட்டுச் செலவினம் சுருக்கமடைந்தமையும் பெருமளவு தூண்டுதல்களாக அமைந்தன. இதன்படி, 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் நுகர்வுச் செலவினம் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் முதலீட்டுச் செலவினம் 2019இன் அதே காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.9 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 4.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. முதலீட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட இச்சுருக்கம் இவ்வாண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளின் பெறுமதி கூட்டலில் காணப்பட்ட பின்னடைவின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. அதேநேரம் 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி முன்னைய ஆண்டின் இதே காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 72.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது. பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 2019இன் தொடர்பான காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.1 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் 4.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்த போதிலும், முன்னைய ஆண்டின் இதேகாலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 21.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகள் 16.1 சதவீதத்தினால் பெருமளவிற்கு சுருக்கமடைந்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வர்த்தகப் பங்காளர் பொருளாதாரங்களிலிருந்தான குறைந்த கேள்வியும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி தளர்வடைந்தமையும் காரணங்களாக அமைந்தன. அதனைத்தொடர்ந்து, 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் மொத்த உள்நாட்டுச் செலவினத்தையும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியினையும் உள்ளடக்குகின்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.9 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தது.

- **நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் 2020இல் ரூ.16,315.1 பில்லியனாக விளங்கி 2019இன் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டது.** மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் எதிர்பார்க்கப்படும் இவ்விரிவாக்கத்திற்கு பெயரளவு நியதிகளில் நுகர்வுச் செலவினத்தின் மிதமான வளர்ச்சியும் முதலீட்டுச் செலவினத்தில் காணப்படும் சிறிதளவு வளர்ச்சியும் பெருமளவிற்கு உதவிபுரியுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுக்கேள்வியைப்பரிசீலனையில்கொள்கையில், தொடர்ச்சியான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தேறிய வெளிநாட்டுக் கேள்வி நிலைமையில் நேர்க்கணியத் தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு உதவக்கூடும். எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நலிவடைந்த வெளிநாட்டுக் கேள்வி ஏற்றுமதிகளையும் கட்டுப்படுத்தக்கூடும். மேலும், 2019 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் உள்நாட்டுச் சந்தையின் நுகர்வோர் விலைகள் உயர்வடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறையில் எதிர்பார்க்கப்படும் இவ்வபிவிருத்திகளுடன் நடைமுறைச் சந்தை விலைகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019இல் பதிவுசெய்யபட்ட 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.

2

## நுகர்வு

- **பொருளாதாரத்தின் மிகப்பெரும் செலவின வகைகளாக விளங்கும் நுகர்வுச் செலவினம் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.12,155.8 பில்லியனாக விளங்கி 2020இல் 2.8 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டது.** வரிக் குறைப்பு மற்றும் வட்டிவீதங்களில் குறிப்பிடத்தக்க குறைப்பு போன்ற இறை மற்றும் நாணயப் பக்கங்களிலிருந்து விரிவாக்க வழிமுறைகள் எடுக்கப்பட்ட போதும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதாரத்தில் காணப்படும் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக தனியார் நுகர்வுச் செலவினம் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, தனியார் நுகர்வுச் செலவினம் 2019இன் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இன் 2.7 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், 2020இன் முதலரைப்பகுதியில் அரச செலவின மாதிரியினைப் பரிசீலனையில் கொள்ளும்போதும் இலங்கை மத்திய வங்கியின் எறிவுகளின் அடிப்படையிலும் அரச நுகர்வுச் செலவினம் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் மிதமான வேகத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதற்கு அரச பணிக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகளில் ஏற்படும் அதிகரிப்பே காரணமாகும்.

## முதலீடு

- **நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீட்டுச் செலவினமானது 2019இல் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 1.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் கொண்டிருக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** குறைந்த வட்டி வீதச் சூழல் மற்றும் புதிய கொடுகடன் வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கிடைத்த நன்மைகள் மற்றும் சட்ட இசைவுத்தாமத வசதிகள் என்பனவற்றின் காரணமாக வதிவிடக் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்படும் விரிவாக்கத்தின் ஆதரவுடன் தனியார் துறை முதலீடுகள் ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட பின்னடைவுகளிலிருந்து மீட்சியடைந்து இரண்டாம் அரைப்பகுதியில் அதிகரிக்கத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கிடைக்கத்தக்க குறிகாட்டிகளினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான நிகழ்வுகளின் காரணமாக முதலரைப்பகுதியில் தனியார் முதலீடுகள் பெருளமளவிற்குச் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது ஆண்டின் ஒட்டுமொத்த முதலீட்டு வளர்ச்சியின் மீது சுமையொன்றினைக் கொண்டிருக்கும். தனிப்பட்ட வீடமைப்பு நோக்கங்களுக்காக தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2019 யூன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் 6.3 சதவீதம் கொண்ட வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. எனினும், இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் சீமெந்தின் கிடைப்பனவு மற்றும் கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் என்பனவும் குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைப் பதிவுசெய்து ஒட்டுமொத்த முதலீடுகளில் மிகப்பெரும் பங்கினைப் பிரசன்னப்படுத்தும் கட்டடவாக்க நடவடிக்கைகளில் பின்னடைவொன்றை எடுத்துக்காட்டின. மேலும், பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் முதலீட்டு பொருட்களின் இறக்குமதிகள் அளவு நியதிகளில் கணிசமான சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. மறுபுறத்தில் ஆண்டின் முதலரைப்பகுதியில் அரசிறையில் காணப்பட்ட கணிசமான வீழ்ச்சிக்கு மத்தியில் அரசின் மீண்டெழும் செலவினத்தின் குறைந்த நெகிழ்ச்சித் தன்மையானது முதலீடுகளுக்கான இடைவெளிகளை மட்டுப்படுத்தக்கூடும். இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக ஒட்டுமொத்த முதலீட்டுச் செலவினம் 2019இல் 27.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 26.9 சதவீதத்திற்குக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2020இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் செயற்றிட்டங்கள் உட்பட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 553.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 351.2 மில்லியனுக்கு[2] 36.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது.** உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முறையே 33.1 சதவீதம் மற்றும் 58.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 108.1 மில்லியனுக்கு 22 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவுசெய்தன. அதேநேரம் வேளாண்மைத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2020இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் சிறிதளவு மட்டத்திலேயே காணப்படக்கூடும்.

## சேமிப்புக்கள்


- **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அளவிடப்பட்ட உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் சிறிதளவு மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** இதற்கமைய, முன்னைய ஆண்டின் முறையே 21.3 சதவீதம் மற்றும் 25.3 சதவீதத்திலிருந்து, 2020இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள்

2 வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொகையானது முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளிட்ட பெறுகைகளை உள்ளடக்கியிருந்ததுடன் இது அத்தியாயம் 5இல் எடுத்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் மதிப்பீடுகள் முதலீட்டுச் சபையல்லாக் கம்பனிகளின் உள்ளடக்கத்தின் காரணமாக வேறுபடக்கூடும்.

2

வரைபடம் 2.7

மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக முதலீடு மற்றும் சேமிப்புகள் (அ)




(அ) தரவுகள் 2010 அடியாண்டிற்கான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படையில் மதிப்பிடுகின்றது.

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 21.4 சதவீதத்திற்கு மேம்பாடடையக்கூடிய அதேவேளையில், தேசிய சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25.4 சதவீதத்திற்கு மேம்பாடடையும். அதேவேளை, ரூபாய் நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் மற்றும் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் சிறிதளவால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.மறுபுறத்தல், 2020இல் சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2019இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முதலீட்டில் காணப்படும் மெதுவான தன்மைக்குச் சமமாக 2020இல் 1.5 சதவீதத்தினால் குறுக்கமடையக்கூடும்.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **இலங்கை மத்திய வங்கியின் நடுத்தரகால பேரண்ட பொருளாதார கட்டமைப்பின் கீழ் எறிவுசெய்யப்பட்டவாறு பொருளாதாரம் 2021இல் ஏறத்தாள 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான இடையூறுகளின் காரணமாக 2020இன் முதலரைப்பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்ற சுருக்கத்திலிருந்து தோன்றுகின்ற தளத்தாக்கத்தின் உதவியுடன் 2021இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க உயர்ந்த வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்படும். அதேநேரம், உறுதியான அரசியல் சூழலொன்றில் மேம்பட்ட வியாபார நம்பிக்கை மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய கொள்கைகள் என்பன முக்கிய சந்தைகளில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று கட்டுப்படுத்தப்படுவதுடன் புதுப்பிக்கப்படுகின்ற வெளிநாட்டுக் கேள்விகளுடன் சேர்ந்து கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளுடன் தொடர்பான வளர்ச்சி உத்வேகத்தினை மீண்டும் வலுப்படுத்துகின்ற வேளையில் இவ்வாதரவளிக்கக்கூடிய கொள்கைச் சூழல், சாதகமான வானிலை நிலைமைகளுடன் சேர்ந்து 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வேளாண்மை வளர்ச்சியை உத்வேகப்படுத்தும். 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கான காத்திரமான தடுப்பூசி பகிரங்கமாகக் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து இவ்வளர்ச்சி உத்வேகம் இன்னும் விரைவானதாகவிருக்கும். மேலும், வெளிநாட்டுத் துறையில் மீட்சியை அடைவதற்குச் சாத்தியமான முழுவளங்களும் இன்னமும் பயன்படுத்தப்படாததினால் ஏற்றுமதி சொத்துப்பட்டியலை பன்முகப்படுத்த வேண்டிய தேவையும் புதிய சந்தைகளைக் கண்டறிய வேண்டிய தேவையும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. அதேவேளை, குறைந்த வட்டி வீத அமைப்பினைப் பேணுவதற்காகத் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்வது முதலீடுகளையும் அதேபோன்று நுகர்வுக்கான கேள்வியையும் தூண்டும். தற்போதைய அரசியல் உறுதித்தன்மையுடன் முதலீட்டாளர் நம்பிக்கையில் ஏற்படும் உத்வேகம் மிகவும் தேவைப்படுகின்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகளை நாட்டிற்குள் கவர்ந்துமுதலீட்டு நடவடிக்கைகளை மேலும் விரிவடையச்செய்யும்.

- **உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கைத்தொழிலுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2021இல் குறிப்பிடத்தக்க உயர்ந்த வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இலங்கை கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான முக்கிய சந்தைகள் 2021இன் ஆரம்பத்தில் வழமைக்குத்திரும்புமென எதிர்பார்க்கப்படுவதுடன் தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்படும் வளர்ச்சியின் ஆதரவுடன் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்விக்கு சாதகமான முறையில் பங்களிக்கும். மேலும், கேந்திரமான இடத்தில் அமைந்திருக்கும் அம்பாந்தோட்டை கைத்தொழில் பூங்கா செயற்றிட்டம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள ஏறாவூரிலுள்ள பிரத்தியேக புடவை/ ஆடைகள் தயாரிப்பு வலயமும் முழுமையடைந்ததும் நாட்டிற்கு பெருமளவிலான கைத்தொழில்களைக் கவருமென எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கா - சீனா வர்த்தகப் போரின் காரணமாக தயாரிப்புத் தளத்தினை சீனாவிலிருந்து வேறு இடங்களுக்கு மீளமைக்கும் அண்மைய போக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வழங்கல் சங்கிலிக்கு ஏற்பட்ட இடையூறுகளைத் தொடர்ந்து தற்பொழுது சீனாவை மையப்படுத்தியிருக்கும் நிரம்பல் தளங்களை பன்முகப்படுத்துவதற்கான முயற்சியும் நாட்டின் தயாரிப்புத் துறைக்கு புதிய வழிகளைத் திறந்து அதை விரிவடையச் செய்யும். மேலும், முக்கிய மருந்தாக்கல் உற்பத்திகளையும் அதேபோன்று கட்டடவாக்கப் பொருட்களையும் உள்ளூரில் தயாரிப்பதனை ஊக்குவிக்கின்ற அரசாங்கத்தின் கொள்கை தயாரிப்பு இயலளவினை உத்வேகப்படுத்தும். அதேவேளை,மத்திய விரைவுப்பாதை மற்றும் புதிய களனிப் பாலம் மற்றும் கொழும்பிலிருந்து அத்துறுகிரியவிற்கான உயர்த்தப்பட்ட வீதி அபிவிருத்தி மற்றும் துறைமுக நகருக்கான உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் போன்ற

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் விரைவுபடுத்தப்படுவதுடன் 2021இல் கட்டுமான நடவடிக்கைகள் மீண்டும் வலுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. றுவன்புர கடுகதி பாதையின் கட்டுமானம் மற்றும் நிதியியல் நகரின் கட்டடவாக்க வேலைகள் என்பனவற்றின் நிருமாணம் 2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றமையானது பொருளாதாரத்தில் கட்டுமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தும். எனினும், கட்டடவாக்க நடவடிக்கைகளை முழு அளவிலான கொள்ளளவுடன் செயற்படும் பொருட்டு கட்டடங்களுக்கான ஒப்புதல் செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்ற அதேவேளையில் கட்டடவாக்கத் துறைத் தொழிலாளர்களுக்கு தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதற்காக தொழில் பயிற்சிகளை வழங்கும் தேவையின் மீதும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை மற்றும் குறைந்த தொழிலாளர் உற்பத்தித்திறன் போன்ற அமைப்பியல் சார்ந்த தடைகள் கைத்தொழில் நடவடிக்கைகளின் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு வெற்றிகொள்ளப்பட வேண்டிய முக்கிய சாவல்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. ஆகவே, உற்பத்தியை அதிகரிக்கின்ற நோக்குடன் தேர்ச்சியைத் தொடர்ச்சியாக உயர்த்துதல், தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளில் முதலீடுகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை ஊக்குவிக்கின்ற தூண்டுதலளிக்கும் கொள்கைச் சூழலொன்றினைப் பேணுதல் மிகமுக்கியமானதாகும்.

- **பணிகளுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அதன் உத்வேகத்தை தொடர்ந்தும் பேணுமென எதிர்பார்க்கப்படுகிறது.** பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி பரந்த அடிப்படையினைக் கொண்டிருக்கும் விதத்தில் எறிவுசெய்யப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிட வசதி, நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து மற்றும் ஏனைய தனியாள் பணிகள் போன்ற அனைத்து முக்கிய பணிகள் வகைகளின் மூலம் ஆதரவளிக்கப்படும். தற்போதைய குறிப்பிட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளிலும் கூட, குறிப்பாக வேளாண்மை மற்றும் உள்நாட்டு கைத்தொழில்கள் மீதான அரசாங்கத்தின் தூண்டுதலளிக்கும் கொள்கையுடன் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடையும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் அச்சுறுத்தல் படிப்படியாக அகலும்பொழுது உலகம் முழுவதிலுமான பயண மற்றும் சுற்றுலா விரிவடைந்து இலங்கையின் சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகள் பழைய நிலைக்கு மீட்சியடையும். அதேவேளை, சேரிடங்களை ஊக்குவிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களும் இலங்கைக்கு உயர் செலவு மிக்க சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு உதவும். இப்பொருளாதார நடவடிக்கைகள் போக்குவரத்து மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளையும் தூண்டும். பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் பயணிகளைக் கையாளும் இயலளவில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் கிரமமான தொழிற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை என்பன உள்நாட்டு விமானப் போக்குவரத்து வலையமைப்பு புனரமைப்புச் செய்யப்பட்டமையுடன் சேர்ந்து போக்குவரத்து நடவடிக்கைகளுக்கும் அதேபோன்று சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளுக்கும் மேலும் ஆதரவளிக்கும். சுற்றுலா நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படாத முழு உள்ளார்ந்த வளத்தையும் போக்குவரத்து மற்றும் தனியாள் பணிகள் போன்ற தொடர்பான பணி நடவடிக்கைகளையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு பிரபல்யம் குறைந்த வானூர்தி நிலையங்களை/ சேரிடங்களை பயணம் மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக ஊக்குவிப்பது முக்கியமானதாகும். இந்நோக்கத்திற்காக செலவு குறைந்த வானூர்தி நிறுவனங்களுடன் பங்காளர்களாக சேர்ந்துகொள்வது கரிசனையில் கொள்ளப்பட வேண்டிய தேர்விற்குரியதொரு விடயமாக முன்வைக்கப்படுகின்றது.

- **தனியார் முதலீடுகளின் உயர்ந்த வளர்ச்சியின் ஆதரவுடன் முதலீட்டு நடவடிக்கைகள் 2021இல் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2020 ஓகத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து அரசியல் உறுதிப்பாடு உறுதிப்படுத்தப்பட்டமையும் அதனைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டிற்கான புதிய அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளமையும் தனியார் துறை முதலீடுகளிலும் அதேபோன்று வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலும் அதிகரிப்புக்களை ஏற்படுத்தி 2021இல் முதலீட்டு நடவடிக்கைகளின் உயர்ந்த வளர்ச்சிக்கு பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அம்பாந்தோட்டை மற்றும் ஏறாவூர் கைத்தொழில் வலயங்களுடன் நிதியியல் நகரமும் இலங்கையை முதலீட்டாளர்களுக்கான முன்னுரிமைக்குரிய நாடாக ஊக்குவிப்பதற்கான அளப்பெரிய வாய்ப்புக்களை வழங்கும். குறிப்பாக, இவை சீனாவிலிருந்து தமது தயாரிப்புத் தளங்களை வேறு இடங்களுக்கு அமைக்க எண்ணியிருக்கும் நிறுவனங்களிலிருந்து முதலீடுகளை கவர்ந்து கொள்ளக்கூடும். மேலும், முதலீடுகள் மருந்தாக்கல் உற்பத்திகளின் தயாரிப்பு, ஊர்திகளுக்கான டயர் மற்றும் உதிரிப்பாகங்கள், ஓடுகள் மற்றும் குளியலறைப் பொருட்கள் உட்பட கட்டட மூலப்பொருட்கள்மற்றும் வர்த்தக வேளாண்மை போன்ற இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களைக் கவர்வதற்கு அரசாங்கத்தின் வலுவான ஊக்குவிப்புக்கள் மூலம் ஆதரவளிக்கப்படும். இவற்றைத் தவிர, ஆயத்தநிலையிலுள்ள குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான கூட்டுறுதி தொடர்மாடி மனைகள் மற்றும் வர்த்தக ரீதியான கட்டட செயற்றிட்டங்கள் என்பன தனியார் துறை முதலீடுகளின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும். அதேவேளை, அரச முதலீடுகள் முன்னுரிமை வாய்ந்த உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் மீது கவனம் செலுத்தும்.

2

- **உயர் வளர்ச்சிப் பாதையில் இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு விரும்பத்தக்க மட்டமொன்றில் தேசிய சேமிப்புக்களை எய்துவதும் பேணுவதும் முக்கியமானதாகும்.** எனினும், அரசாங்கத்தின் தொடர்ச்சியான குறைச் சேமிப்புக்களின் காரணமாக உள்நாட்டு சேமிப்புக்கள் 2021இல் விரும்பத்தக்க மட்டத்திற்குக் கீழேயே தொடர்ந்தும் காணப்படுமெனினும் சில முன்னேற்றங்களை தனியார் துறை சேமிப்புக்களில் காணமுடியும். சவால்மிக்க 2020ஆம் ஆண்டினைத் தொடர்ந்து உலகில் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய மாற்றல்கள் 2021இல் மேம்படுகின்ற அதேவேளையில், தேறிய முதலாந்தர வருமானம் மோசமடையக்கூடும். முன்னைய ஆண்டிலும் பார்க்க முதலீட்டு செலவினங்களுக்கான கேள்வி உயர்வாக இருக்கின்றமைக்கிடையிலும் தேறிய முதலாந்தர வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான தேசிய சேமிப்பின் வளர்ச்சியின் மீது சுமையொன்றை ஏற்படுத்தி சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை விரிவாக்கும்.